NEWS RELEASE

# SRI RAMACHANDRA MEDICAL CENTRE

Porur, Chennai-600 116. Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

## **ஸ்ரீ ராமச்சந்திரா**வில்

## பக்கவாத விளைவு இல்லா அதிநவீன இதய வால்வு சிகிச்சை

சென்னை

17.06.2022

72 வயது முதியவருக்கு நவீன கருவியின் உதவியுடன் அறுவை சிகிச்சையின்றி வெற்றிகரமாக இதய வால்வை பொருத்தி போரூர் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனை சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் இதயவியல் **துறையின்** தலைவர் மற்றும் இயக்குனர் டாக்டர் ச.தணிகாசலம் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை.

அறுவைச்சிகிச்சை மூலம் பழுதடைந்த இதய வால்வுகளை நீக்கிவிட்டு செயற்கை வால்வுகளை பொருத்தும் சிகிச்சை முறை பல வருடங்களாக நடைமுறையில் உள்ளது என்று எல்லோரும் அறிந்த ஒன்றே.

கடந்த **10** வருடங்களுக்கு மேலாக அறுவை சிகிச்சை இன்றி செய்யப்படும் இந்த இதய வால்வு மாற்று சிகிச்சையின் போது வெளிப்படும் நுண்ணிய கால்சியம் துகள்கள் மூளைக்குச் செல்லும் ரத்தக்குழாய்களை பாதித்து பக்கவாதத்தை ஏற்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதால், இவ்வகையான சிகிச்சையை மேற்கொள்ள நோயாளிகள் தயங்குகிறார்கள்.

மருத்துவ விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சி காரணமாக புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையின்போது பயன்படுத்தப்படுகின்றன.

இதய வால்வு மாற்று சிகிச்சையின் போது ஏற்படும் நுண் துகள்கள் மூளைக்கு செல்லும் ரத்தக் குழாய்களுக்கு செல்லா வண்ணம் வடிகட்டி

தடுத்து, மிகவும் பாதுகாப்பான முறையில் அறுவை சிகிச்சையின்றி இதய வால்வினை செயற்கை முறையில் பொருத்தும் நவீன கருவி ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையின் இதயவியல் பிரிவில் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதய வால்வு மாற்று சிகிச்சையில் இந்த கருவியை பயன்படுத்தும்போது, இதன் நுனியில் பொருத்தப்பட்டுள்ள நுண் வடிகட்டி மூளைக்குச் செல்லும் ரத்தக் குழாய்களுக்குள் செலுத்தப்பட்டு, சிகிச்சையின்போது வெளிப்படும் பக்கவாதத்தை ஏற்படுத்தும் ஆபத்தான துகள்களை உள்வாங்கிக் கொள்கிறது. இத்துகள்கள் மூளைக்குச் செல்லா வண்ணம் இக்கருவி மூலம் தடுக்கப்படுவதால், பக்கவாதம் ஏற்படும் வாய்ப்புகள் முற்றிலும் தடுக்கப்படுகின்றன. இதன் மூலம் பாதுகாப்பான இதய வால்வு மாற்று சிகிச்சை உறுதி செய்யப்படுகிறது.

எளிமையானதும் பாதுகாப்பானதும் ஆன இந்த சிகிச்சை முறையை பயன்படுத்தி டாக்டர். S. நாகேந்திர பூபதி தலைமையிலான மருத்துவக் குழுவில் டாக்டர். S. ரமேஷ், டாக்டர். S. சதானந்தம் பங்கு பெற்று, போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் முதல்முறையாக இச்சிகிச்சை செய்யப்பட்டது.

For more information please contact
Dr. S. Nagendra Boopathy, Associate Professor, Cardiology
73585 60284

Issued by Mr. T. G. Nallamuthu
Consultant, Media Relation – 9444265578